செய்தி வெளியீடு எண்: 914 நாள்: 04.07.2024

# செய்தி வெளியீடு

தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், கடனா நீர்த்தேக்கத்தில் இருந்து 2024–2025–ஆம் ஆண்டு கார் பருவ சாகுபடிக்கு 05.07.2024 முதல் 31.10.2024 முடிய 119 நாட்களுக்கு நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தை பொறுத்து நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 125 கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிடுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் தென்காசி மாவட்டத்தில் அரசபத்து, வடகுறுவ பத்துகால், ஆழ்வார்குறிச்சி தென்கால், ஆம்பூர் பெருங்கால், மஞ்சம்புளிகால், காக்கநல்லூர் கால், காங்கேயன்கால் நேரடி பாசனப் பரப்பு மற்றும் கால்வாய்களில் உள்ள 3,987.57 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu